திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள கூட்டுறவு நூற்பாலைகளில் உற்பத்தி செய்யப்படுகிற நூலை விநியோகம் செய்யவும் விலையை நிர்ணயிக்கவும் மத்திய அரசினுடைய அனுமதி ஏதேனும் பெற வேண்டியுள்ளதா? ஆமென்றால் அதனுடைய விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: பெற வேண்டிய அவசியம் இல்லை.

திரு. ஏ. சுப்பிரமணியம்: இந்தக் குழுவில் உள்ள உறுப்பினர்கள் யார் யார் என்பதை அறியலாமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இயக்குநர் அவர்கள் தலைவராக இருக்கிறார்கள். தமிழ்நாடு மத்திய சங்கத்தினுடைய தலைவர், கோவாப்பரேடிவ் கூட்டுறவு ஆலைகளினுடைய தலைவர்களும் அங்கத்தினர்களாக இருக்கிறார்கள். பிரைமரி சங்கங்களைப் பொறுத்த அளவிலே அவர்களுடைய பிரதிநிதிகள் 4 பேர்கள் இதிலே போடப்பட்டிருக்கிறார்கள்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: ஏனைய ஆலைகள் எல்லாம் லாபம் அடைகிற நேரத்திலே இந்தக் கூட்டுறவு நூற்பாலைகள் மட்டும் நஷ்டமடைகின்றன. நெசவாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டு குறைந்த விலையில் விநியோகம் செய்கிற காரணத்தால் இந்த நஷ்டம் ஏற்படுகிறது. இதைத் தவிர மார்க்கெட்டில் எந்த எந்தத் தரமுள்ள நூல்கள் தேவை என்று நிர்ணயித்து உற்பத்தி செய்யாததும் இதற்கு ஒரு காரணம் என்று சொல்லப்படுகிறது. இவையெல்லாவற்றையும் கவனிக்கிற இந்தக் குழுவிலே நெசவாளர்களின் பிரதிநிதிகளையும் நூற்பாலை எந்த வட்டாரத்திலே இருக்கிறதோ அந்த வட்டாரத்தைச் சேர்ந்த நெசவாளர்களின் பிரதிநிதிகளைப் பொதுமக்களின் பிரதிநிதிகள் என்ற முறையிலே சட்டமன்ற உறுப்பினர்களையும் இடம்பெறச் செய்ய ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தனியார் ஆலைகள் தான் நஷ்டத்தில் நொடித்துப் போய்விடுகின்றன. ஆனால் நம்முடைய ஆலைகள் 12-ம் தைரியமாக நடந்து கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல் நாம் அதிகப்படியான லாபம் இல்லாமல் சந்தை விலைக்கு—மார்க்கெட் விலைக்கு—கொடுப்பது அதற்கு ஒரு காரணம். அதுமட்டுமல்லாமல்

1975 நவம்பர் 11]

நாம் நம்முடைய நெசவாளிகளுக்குத் தேவையான நூலை மட்டும்தான் உற்பத்தி செய்கிறோம் லாபமுள்ள அதிக எண்ணிக்கையுள்ள 100 கவுன்ட்ஸ் உள்ள நூலை உற்பத்தி செய்யவில்லை, இதுவும் ஒரு காரணம் இப்போது உள்ள குழுவில் நெசவாளர்களின் பிரதிநிதிகள் இருக்கிறார்கள்.

திரு. சோ. அழகர்சாமி: பிரைமரி சங்கத்திலிருந்து போடப் பட்டுள்ள நான்கு உறுப்பினர்கள் யார் யார்?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இப்போது அந்த உறுப்பினர்கள் நியமிக்கப்படவில்லை, ஆகவே பெயர் என்னிடத்திலே இல்லை.

*291 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூட்டுறவு நெசவு ஆலைகள் ஆலோசனைக் குழு ஒன்று புதிதாக அமைக்கப்பட்டுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் பணிகள் யாவை?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) இல்லை.

(இ) கேள்வி எழவில்லை.

திருநெல்வேலியில் கைத்தறிக் கண்காட்சி

*292 வினா—திரு. ஏ. சுப்பிரமணியம்:
திரு. பெ. சௌந்தரபாண்டியன்: } மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லையில் இவ்வாண்டு நடைபெற்ற கைத்தறி கண்காட்சியில் 13—4—1975 அன்று இரவு தீ விபத்து ஏற்பட்டது என்பது உண்மையா?

(இ) ஆமெனில், அதனால் ஏற்பட்ட சேதம் எவ்வளவு?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

(இ) ரூபாய் 24,063.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, இந்த தீ விபத்து ஏற்பட்டதற்குக் காரணம் என்ன? இதிலே எவ்வளவு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தற்செயலாக நேர்ந்த விபத்து என்று போலீஸார் முடிவு கட்டியிருக்கிறார்கள். சுமார் 25 ஆயிரம் ரூபாய்.

திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, இந்த விபத்தினால் இரண்டு பெரிய சொஸைடிகள் அம்பாசமுத்திரம் கூட்டுறவு சொஸைடி, தேங்காய் பட்டணம் கூட்டுறவு சொஸைடி ஆகிய இரண்டு பெரிய சொஸைடிகளில் சேதம் ஏற்பட்டிருக்கிறதே இதை ஈடுகட்ட அரசு நஷ்ட ஈடு எவ்வளவு கொடுத்திருக்கிறது? இப்படிப்பட்ட பெரிய கண்காட்சியிலே தீயணைப்பு எஞ்சின் அங்கே இல்லாமல் இருந்திருக்கிறது, கண்காட்சி நடந்து கொண்டிருக்கும்போது ஏன் அந்த எஞ்சின் அங்கே வைக்கப்படவில்லை என்பதைப் பற்றி அரசு விசாரித்திருக்கிறதா? அப்படியானால் அதன்மீது என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப் பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது திருநெல்வேலியில் நடைபெற்றது. அந்த நகரத்திலேயே தீயணைப்புப் படை இருக்கிறது. ஆகவே, அங்கேயே வைக்கப்பட வேண்டிய அவசியமில்லை. இந்த நஷ்டத்தை ஈடுகட்ட மாவட்ட ஆட்சியாளர் அவர்கள் கூட்டுறவு சங்கங்களிலிருந்தும் கூட்டுறவு நூற்பாலைகளிலிருந்தும் நன்கொடை வசூலித்து ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி : கண்காட்சிகளில் இப்படி நஷ்டம் ஏற்பட்டால் நாம் ஈடுகட்டுவதற்குப் பதிலாக இந்த கண்காட்சிகள் நடத்துகிறபோதே அவைகள் எல்லாம் ஃபைர இன்ஷூரன்ஸ் செய்துகொள்ள வேண்டுமென்ற முறையிலே ஏதாவது வழிவகை இருக்கிறதா? அப்படி இருந்தால் இந்த கண்காட்சியும் செய்துகொள்ள வேண்டுமென்று இன்ஸ்ட்ரக்ஷன்ஸ் கொடுக்கப்பட்டதா?